## ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி

## திருச்சிராப்பள்ளி- 5

## அக்டோபர் - 2011 மாதத்திய கல்லூரி நிகழ்வுகள்

### ஸ்ரீ ஆண்டாள் தமிழிலக்கியப் பேரவை:

04.10.2011 அன்று ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறையில் ஸ்ரீ ஆண்டாள் தமிழிலக்கியப் பேரவைச் சார்பாக சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக, திரு.வி. ஜீவகுமாரன், நாவலாசிரியர், டென்மார்க். அவர்கள் கலந்து கொண்டு "வெளிநாடுவாழ் தமிழர்களின் சீரழிவும் - என் படைப்புகளும்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். அவர்தம் உரையில், புலம் பெயர்ந்த தமிழர்களின் வாழ்க்கை நிலையினைத் தன் படைப்புகளில் படைத்திருக்கும் பாங்கினை வெளிப்படுத்தினார். பள்ளி செல்லும் மாணவ மாணவிகள் கலாச்சார சீரழிவுகள் குடும்பத்தை எங்ஙனம் சீரழிக்கின்றன என்பதையும் கலாச்சார சீரழிவினால் தன் குழந்தைகளின் நிலை கண்டு பெற்றோர்களின் தாங்க இயலா துயரத்தினைத் தன் படைப்புகளின் துணைக்கொண்டு எடுத்துரைத்தார். முன்னதாக, தமிழ்த்துறைத்தலைவர் முனைவர். பி. கரிகாலன் வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை தமிழ்த்துறைப்பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

### வழிகாட்டி நிகழ்ச்சி:




ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ட்ரிபிள்-ஐ திட்டத்தின் கீழ் 8/10/2011 அன்று பள்ளி மாணவர்களுக்கான “வழிகாட்டி” நிகழ்ச்சி ஸ்ரீரங்கம் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கல்வி ஆலோசகர் திரு. ஜெயப்பிரகாஷ் காந்தி கலந்துகொண்டு தன் அனுபவரீதியான தகவல்களை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடம் பகிர்ந்துகொண்டார். பன்னிரெண்டாம் வகுப்பிற்கு பிறகு பொறியியல், கலை,அறிவியல் மற்றும் பிற துறைகளின் பாடப்பிரிவுகள் மற்றும் வேலைவாய்ப்புகள் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்ததுடன் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் கேள்விகளுக்கும் விளக்கமளித்தார். நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் த.சிவசுப்ரமணியன்,



*ஸ்ரீரங்கம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு.வி.கணபதிஆனந்தன் , ஸ்ரீரங்கம் கல்விஅறக்கட்டளை பொருளாளர் திரு. எம்.எஸ்.நந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர். கல்லூரியின் டிரிபிள்-ஐ திட்ட ஒருங்கிணைப்பாளர் பேரா.என்.சித்ரா, துணைமுதல்வர் பேரா எம்.பிச்சைமணி நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினைச் செய்திருந்திருந்தனர்.*

***பாரதிதாசன் பல்கலைக்கழகக் கலைப்போட்டிகள் - 2011:***

*22.10.2011, 23.10.2011, 24.10.2011 ஆகிய மூன்று நாட்கள் பாரதிதாசன் பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கிடையே நடைபெற்ற கலைப்போட்டி - 2011 - நடைபெற்றது. அந்நிகழ்வில், நம் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு கலைப்பண்பாட்டு பேரணியில் முதல் பரிசைப் பெற்று சுழல்கோப்பையையும் வென்றுள்ளனர். இசைப்போட்டியில் முதலிடம் பெற்று ஒட்டுமொத்த சுழல் கோப்பையையும் வென்றுள்ளனர். நுண்கலைப் போட்டியில் முதலிடம் பெற்று ஒட்டுமொத்த சுழல்கோப்பையும் வென்றுள்ளனர். நடைபெற்ற 28 போட்டிகளில் 18 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளனர். அவற்றில் 4 முதற்பரிசினையும் 5 இரண்டாம் பரிசினையும் 4 மூன்றாம்பரிசினையும் 2 நான்காம் பரிசினையும் 3 ஐந்தாம் பரிசினையும் வென்றுள்ளனர். மேலும் பல்வேறு பரிசுகளைப் பெற்றதுடன் ஒட்டுமொத்த ரன்னர் கோப்பையையும் வென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

*கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் ஸ்ரீ என்.கஸ்தூரிரங்கன், முதல்வர் முனைவர் த,சிவசுப்ரமணியன், துணைமுதல்வர் பேரா.எம்.பிச்சைமணி ஆகியோர் நிகழ்ச்சிக்கு நேரில் சென்று மாணவர்களை ஊக்கப்படுத்தியதுடன் தங்களது வாழ்த்துகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்தனர்.*

*ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர்.பி.கரிகாலன், பேரா திருமதி.ஜெயஸ்ரீமோகனரங்கன், பேரா.திருமதி.லதாஸ்ரீதர், முனைவர். க. சுந்தரமூர்த்தி ஆகியோர் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து ஊக்கப்படுத்தி வெற்றிக்கு வித்திட்டனர்.*

***விளையாட்டுப்போட்டி:***

*பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்குட்பட்ட கல்லூரிகளுக்கிடையேயான விளையாட்டுப்போட்டிகள் 10.102011 அன்று திருச்சி அண்ணா விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது. இதில் நமது கல்லூரி சார்பில் கலந்து கொண்ட முதுகலை வணிகவியல் துறை மாணவர் கோபாலகிருஷ்ணன் குத்துச் சண்டை போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றார்.*

***முதுகலை சமூகப்பணித்துறை:***

*முதுகலை சமூகப்பணித்துறையின் முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் கொடைக்கானல் செண்பகனூர் ஆங்க்லேட் இயற்கை வரலாற்று நிறுவனத்திற்கு, களப்பணிக்காக 26.9.2011 முஹ்தல் 28.09.2011 மூன்று நாள் பயணம் மேற்கொண்டனர். பழனிமலை குன்று மற்றும் அதைச் சுற்றியுள்ள மற்ற குன்றுகளைப் பற்றியும், இயற்கை வளத்தைப் பாதுகாப்பது பற்றிய வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் மாணவர்களுக்கு பலவகையான மரவகைகளையும் அதன் தோற்றம் மற்றும் அங்கு விதைக்கப்பட்ட காரணங்கள் பற்றிய குறும்படம் காண்பிக்கப்பட்டது. மாணவர்கள் குன்றுகளுக்கும் சோலைகளுக்கும்*

மலையேற்றம் சென்றனர். பேரா. சித்ரா, பேரா.ஆ.அருண்பிரகாஷ், ஆகியோரின் வழிகாட்டுதலுடன் மாணவர்கள் சென்றுவந்தனர்.

*22.10.2011* அன்று ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரியின் முதுகலை சமூகப்பணித்துறை மாணவ மாணவிகள் சேலம் உருக்காலையைப் பார்வையிடச் சென்றனர். அந்நிகழ்வில் சேலம் உருக்காலை செயல்படுகளைப் பற்றியும் அதன் தோற்றம் மற்றும் வளர்ச்சி, விரிவாக்கப்பணி போன்றவற்றையும், உருக்காலைக்கு ஆட்கள் தேர்வு செய்யும் முறை பற்றியும், பணிகாலத்தில் விபத்து மற்றும் உயிரிழப்பிற்கான இழப்பீடு மற்றும் உதவித்தொகை வழங்கல், மற்றும் ஆலைத் தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு தகுதியின் அடிப்படையில் ஆலையில் பணி ஒதுக்கீடு வழங்கும் முறைப்பற்றியும் நடைமுறை செயல்பாடுகளை நேரடியாக கேட்டறிந்து பயன் பெற்றனர். பேரா. ச. சசிகலா, பேரா.ஆ.அருண்பிரகாஷ், ஆகியோரின் வழிகாட்டுதலுடன் மாணவர்கள் சென்று வந்தனர்.

ஸ்ரீ. என்.கஸ்தூரிரங்கன்

செயலர் & தாளாளர்